# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.84/2022**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : **நாராயணன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **திருவேங்கடம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1,5,7,9 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(24.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருவண்ணாமலையில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டலில் வேலை செய்து வருகிறேன். 21.10.2019ம் தேதி வடக்கம்பட்டி கிராமத்தில் எனது தங்கை மாப்பிள்ளை கதிரேசன், பாண்டியம்மாள், ராஜா, தேவி, பாண்டியராஜ், தனபாக்கியம், வினோத்குமார், ஜெகன்,. புவனேஷ்வரி ஆகியோர்கள் வீடு சம்பந்தமாக எனது தங்கையிடம் கேட்க சென்றோம். அப்போது வாய் தகராறு ஏற்பட்டது. அப்போது காலை 11 மணியிருக்கும். பின்பு அருகில் உள்ள நபர்கள் பஞ்சாயத்து செய்து அனுப்பிவிட்டார்கள். பின்பு அன்று மாலை 4 மணியில் வீட்டில் படுத்திருந்தோம். கதிரேசன், பாண்டியம்மாள், ராஜா, தேவி, பாண்டியராஜ், தனபாக்கியம், வினோத்குமார், ஜெகன்,. புவனேஷ்வரி ஆகியோர் வந்து கதவை தட்டினார்கள்., கதவை எனது மருமகன் சுரேஷ் திறந்தார். கதவை திறக்கும் போது பாண்டியராஜ், வினோத்., ஜெகன்., ராஜா, கதிரேசன் ஆகியோர்கள் இழுத்து போட்டு அடித்தார்கள். அதை விலக்க வந்த எனது சம்மந்தி முனிஸ்வரனையும் கட்டையால் தோளில் அடித்துவிட்டார்கள்.

நாங்கள் காவல் நிலையம் சென்றோம்., பின்பு வலி இருந்ததால் மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். திருமங்கலம் மருத்துவமனையில் இருந்து மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். அங்கு சிகிச்சையில் நான் மற்றும் மற்றவர்களும் சிகிச்சையில் இருந்தோம். இரவு 11 மணிக்கு போலிசார் வந்து என்னிடம் புகார் பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். வடக்கம்பட்டி எனது பூர்வீக ஊர் என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் அனைவரும் தங்கச்சி மற்றும் தங்கச்சி வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். வடக்கம்பட்டியில் முனியாண்டி சாமி திருவிழா என்றால் சரிதான். மேற்படி ஊர் திருவிழாவிற்கு மேற்படி எதிரிகள் மற்றும் நாங்கள் வந்து தங்குவோம் என்றால் சரிதான். முனியாண்டி திருவிழா 2 நாட்கள் நடக்கும் என்றால் சரிதான். 26.01.2019ம் அன்றும் திருவிழா நடக்கும் அதற்கு முதல் நாள் 25.01.2019ம் தேதியும் திருவிழா நடக்கும் என்றால் சரிதான். திருவிழாவின் போது யார் வீட்டில் தங்குவோம் என்றால் சம்மந்தி வீட்டில் தங்குவோம். எனது சம்மந்தி முனிஸ்வரன் வீட்டில் தங்குவோம். எல்லாருக்கும் பொதுவான அவரது பூர்வீக பாத்தியப்பட்ட வீட்டில் எதிரிகள் அனைவரும் தங்கியிருப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி என் தங்கை வீட்டில் பெண் எடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். சரவணாதேவி வீட்டில் பெண் எடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி இருவருக்கும் பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் தங்கியிருந்த வீட்டிற்கு 26.01.2019 அன்று நான் சென்றேன் என்றால் சரிதான். நான் எனது மனைவி தேவசேனா மற்றும் எனது மகன் பிரவின் ஆகிய 3 பேர் மட்டும் தான் போனதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இவருடன் சேர்ந்து எனது சம்மந்தக்காரர் முனிஸ்வரன் அவரது மகன்கள் இருவர் தினேஷ் மற்றும் சுரேஷ் அவருடைய நண்பர்கள் அடையாளம் தெரியாத 5 பேரை மேற்படி எதிரிகளின் வீட்டிற்கு அழைத்து சென்றேன். மேற்படி எதிரிகளின் வீட்டிற்கு எல்லாரும் சென்று எனது அக்கா பாண்டியம்மாளை தலையில் தாக்கினார்கள் பின்பு வினோத் என்ற நபரை சட்டையை பிடித்து அனைவரும்

சேர்ந்து தாக்கினார்கள். மேற்படி எதிரிகளின் வீட்டில் நடந்த சண்டை உண்மைதான். மேற்படி எதிரிகளையும் எங்களையும் விலக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் குறிப்பிட மாதிரி மேற்படி எதிரிகள் தாக்கிவிட்டு சென்றதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி முனியாண்டி சாமியின் வழிபாடின் படி முறைப்படி நான் தாக்கவில்லை என்றால் சரிதான்.

26.01.2019ம்தேதி மாலை 4 மணிக்கு மேற்படி எதிரிகள் அனைவரும் எனது சம்மந்தக்காரர் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் யாரும் எனது சம்மந்தக்காரர் வீட்டிற்கு யாரும் வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எனது சம்மந்தக்காரர் முனியாண்டி கோவிலுக்கு மாலை சாத்துவார் என்றால் சரிதான். கோவிலுக்கு சாத்தக்கூடிய மாலை சுமார் 20 கிலோ அதற்கு மேலேயும் இருக்கலாம். 20 கி. மாலையை தூக்கினார் தோள்பட்டையில் வலி இருக்கும் என்றால் சரிதான். 26.01.2019ம் தேதி மாலை 4 மணிக்கு எனது மருமகனுக்கு மேற்படி எதிரிகளால் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு இருவருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றும் மேற்படி எதிரிகள் யாரும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் 20 நிமிடம் நடைபெற்றது என்று குறிப்பிடவில்லை. மேற்படி நான் குறிப்பிட்ட நேரத்தில் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து முடிந்தவுடன் நானும் எனது சம்மந்தக்காரரும் கள்ளிக்குடி காவல் நிலையத்திற்கு 5 மணிக்கு சென்றோம் என்றால் சரிதான். சண்டையின் போது யார் யார் விலக்கிவிட்டார்கள் என்றால் அசோக், கண்ணன், கொத்தனர், ஆகியோர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். மேற்படி புகாரை போலிசார் விசாரிக்கும் போது எனது சம்மந்தக்காரர் சொல்ல எனது மருமகன் கைப்பட எழுதினார் என்றால் சரிதான். ஏற்கனவே புகாரானது எழுதி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது மருமகன், மற்றும் மகனுக்கு எவ்வித காயம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் எனது உறவினர் என்றால் சரிதான். சொத்து பிரச்சினை காரணமாக முன் பகை காரணமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.84/2022**
**Prosecution Witnesses : 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : **காசிமாயன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பரமத்தேவர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1,5,7,9 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(24.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 26.01.2019ம் தேதி வடக்கம்பட்டி கிராமத்தில் நான் வருடம் வருடம் முனிஸ்வரன் கோவிலுக்கு சென்று திருவிழா காலங்களில் சாமி கும்பிடுவது வழக்கம். அதே போல் மறுநாள் காலை 10–11 மணிக்கு வடக்கம்பட்டிக்கு சென்ற போது முனிஸ்வரன் அவரது வீட்டிற்கு சாப்பிட கூப்பிட்டார். நானும் சாப்பிட சென்றேன். பின்பு சாப்பிட்டுவிட்டு வீட்டின் மாடியில் இளைப்பாறினோம். வீட்டில் நிறைய பேர் இருந்தார்கள். சாப்பிட்டுவிட்டு நான் வெளியே கிளம்பும் போது வீட்டு வாசலில் கொஞ்சம் தள்ளி ஐஸ் சாப்பிட்டு கொண்டிருந்தேன். சத்தம் கேட்டது. நான் ஓடி போய் பார்த்தேன்,. அப்போது ஆணும் பெண்ணும் கூட்டமாக கையில் கம்பை வைத்து சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். முனிஸ்வரனும் அவரது மனைவியும் கீழே கிடந்தார்கள். நான் ஓடி சென்று சண்டையை

விலக்கும் போது என் மீதும் அடி விழுந்தது. கூட்டத்தில் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. முனிஸ்வரன் மீதும் வீட்டின் கதவுகள் மீதும் கல் செங்கல் கொண்டு எறிந்தார்கள். பின்பு நானும் முனிஸ்வரனின் மகன்களும் முனிஸ்வரன் மனைவியையும் ஆட்டோவில் கள்ளிக்குடி காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு போலிசார் எங்களை மருத்துவ மனைக்கு போக சொன்னார்கள் நாங்கள் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு சென்றோம். பின்பு அப்பல்லோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். பின்பு நான் கடைக்கு வந்துவிட்டேன். பின்பு முனிஸ்வரன் கையிலும் அவரது மனைவி காலிலும் கட்டு போட்டிருந்தனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி புகார்தாரர் முனிஸ்வரனை 25 வருடமாக தெரியும் என்றால் சரிதான். வருடம் வருடம் முனியாண்டி கோவிலில் சாமி கும்பிட என்னை அழைத்து செல்வார் என்றால் சரிதான். மேற்படி அவர் உண்மையில் மாலை தூக்குவார் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள முகவரி உண்மையான முகவரி அதில் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த உண்மை முகவரியில் நான் அங்கே இல்லை என்றால் சரியல்ல. நான் திருமங்கலத்தில் 30 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். நான் DSP ஆபிஸ் சந்தில் உள்ள ஒரு முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். திருமங்கலத்தில் உள்ள முகவரியை நான் தரவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் அனைவரையும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். மேற்படி முனிஸ்வரனை தாக்கிய நபர்களையும் நான் நேரடியாக பார்த்ததில்லை என்றால் சரிதான். 27.01.2019 ம் தேதி தான் சம்பவம் நடைபெற்றது என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் முனிஸ்வரனை தாக்கவில்லை என்றும் எதிரிகள் பார்க்கவில்லை என்றும் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிரிகளை தெரியாது என்று சொல்லியுள்ளேனா என்றால் 3 எதிரிகளை தெரியும் என்று சொல்லியுள்ளேன். நான் எனது முகவரியை மாற்றி சொல்கிறேன் என்றாலும்

பொய் சொல்கிறேன் என்றாம் எனக்கு எதிரிகளை பற்றி மற்ற சாட்சிகள் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை